சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–05.10.2021

## <u>அவசரக்கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் புரட்டாசி மாதம் 19–ஆம் நாள் (அக்டோபர் திங்கள் 05–ஆம் நாள்:–05.10.2021) செவ்வாய் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தொற்று தொடர்பாக பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவின்படி நான்கு முக்கிய இடங்களில் விழிப்புணர்வு பாதைகள் (Flex Board) வைத்த வகையில் ஆன செலவினம் ரூ.1980/—ஐ நகராட்சி துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு.ச.முத்தையா செலவு செய்ததாகவும் அதனை அவர்க்கு வழஙக கோரியதை தொடர்ந்து மேற்படி செலவினத் தொகை வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:— மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**
**தீர்மான எண், நாள் 366, நாள்.05.10.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.21085/பி3/2016, நாள்.31.08.2016—இன்படி 01.08.2016 முதல் 31.07.2019 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலத்திற்கு பின்பு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக கடந்த 03.06.2019ம் அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் மேற்கண்ட அலுவலகத்தில் இருந்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி ந.க.2790/2019/அ3, நாள்.03.07.2019ம் தேதிய கடிதப்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்திரவு கிடைக்கும் வரை, சின்னமனூர் நகராட்சி பொது மக்களின் சுகாதார நலன் கருதி இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.0576/2015/எச்1இன்படி 01.08.2019 முதல் 30.09.2021 வரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி உத்திரவை எதிர்நோக்கி ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது. இந்நகராட்சியில் டெஙகு மற்றும் கொரோனா தொடர்பான பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மேலும் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை தரம்பிரித்தல், மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தல் போன்ற காரணஙகளுக்காகவும், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, தினந்தோறும் பொது மக்களிடமிருந்து வருகின்ற குறைகளை களையவும் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவை எதிர்நோக்கி மூன்று மாத காலத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.318, நாள்.30.06.2021ன்படி ஜீலை 2021 முதல் செப்டம்பர் 2021 வரை ந.க.எண்.0576/2015/எச்1, நாள்.30.06.2021இன் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி பணிபுரியும் நிறுவனத்தின் பணியாளர்கள் மூலம் தூய்மை பணி செய்ய நீட்டிப்பு செய்து உத்திரவு வழஙகப்பட்டது.

இந்நிலையில் 30.09.2021 உடன் ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு முடிவடைவதாலும், இந்நகராட்சி பகுதியில் கொரோனா (COVID-19) தொற்று பரவல் தாக்கம் இருப்பதாலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.20980/2021/எச்2, நாள்.16.09.2021—இல் சின்னமனூர் இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் மாபெரும் கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் தூய்மைப்படுத்தும் திட்டத்தில் நகர் பகுதிகளில் வடகிழக்கு பருவ மழைகளை முன்னிட்டு மழைக்காலஙகளில் தாழ்வான பகுதிகளில் உள்ள நீர் தேஙகும் பகுதிகளில் டெஙகு மற்றும் மலேரியா நோய் பரவா வண்ணம் மாபெரும் தூய்மைப் பணி முகாம் நடைபெறவுள்ளது. எனவே மேற்படி முகாமில் பணியாளர்கள் ஈடுபடவேண்டிய அவசர சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவு எதிர்நோக்கியும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று (01.10.2021 முதல் 31.12.2021 வரை) உள்ள மூன்று மாத காலத்திற்கு அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்ய ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:— | 1.பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி உத்திரவு வழஙகிய திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0576/2020/எச்1)<br>2. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியதை மன்றம் ஏற்கலாம். |
| தீர்மான எண், நாள் | 367, நாள்.05.10.2021 |
| தீர்மானம் | |

*******

பொருள் எண்.3

சின்னமனூர் நகராட்சியில் பணிபுரியும் தகுதியான பணியாளர்களுக்கு வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 2021—2022 ஆம் ஆண்டிற்கான இரண்டு ஜோடி சீருடைகள் மற்றும் அதற்கான தையல்கூலி வழஙகுவதற்கும் மேலும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:— | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3696/2021/எச்1) |
| தீர்மான எண், நாள் | 368, நாள்.05.10.2021 |
| தீர்மானம் | |

*******

**பொருள் எண்.4**

தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஒரு எண்ணம் பொதுக் கழிப்பிடம் மற்றும் இரண்டு எண்ணம் சமுதாய கழிப்பிடங்கள் பொது மக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது.

எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி, சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, வாரச்சந்தை பின்புறம் உள்ள பொதுக் கழிப்பிடத்திலும், வார்டு எண்.4, காந்தி நகர் காலனி 3வது தெரு மற்றும் வார்டு எண்.3, சாமிகுளத்தில் உள்ள சமுதாயக் கழிப்பிடங்களில் மராமத்துப் பணிகள் கீழ்க்கண்ட விவரப்படி மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| சமுதாயக் கழிப்பிடம் | | |
| 1. | வார்டு எண்.4, காந்தி நகர் காலனி 3வது தெருவில் உள்ள சமுதாயக் கழிப்பிடத்தில் மராமத்து பணி செய்தல் | 2.75 |
| 2. | வார்டு எண்.3, சாமிகுளத்தில் உள்ள சமுதாயக் கழிப்பிடத்தில் மராமத்து பணி செய்தல் | 2.75 |
| பொதுக் கழிப்பிடம் | | |
| 3. | வார்டு எண்.5, வாரச்சந்தை பின்புறம் உள்ள பொதுக் கழிப்பிடத்தில் மராமத்து பணி செய்தல் | 4.00 |
| | மொத்தம் | 9.50 |

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **நகராட்சியில் போதிய நிதி இல்லாத காரணத்தினாலும், மேற்படி பணிக்கான மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்தினை முழு மான்யமாக வழஙகக் கோரி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.**
   **(ந.க.எண். 3746/2021/இ1)**

**தீர்மான எண், நாள்** **369, நாள்.05.10.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா பெருந்தொற்று தாக்கம் இருப்பதாலும் நவம்பர் 1 முதல் பள்ளிகள் திறக்க இருப்பதாலும், பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களிடம் (லைசால்) கிருமி நாசினி தெளிக்குமாறு தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. குறிப்பாக தடுப்பூசி முகாம் நடைபெறும் இடங்களில் கிருமி நாசினியான லைசால் தெளிக்க வேண்டியுள்ளதால், அவசர அவசியம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி 1000 லிட்டர் லைசால் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3730/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **370, நாள்.05.10.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குச் சொந்தமான கருங்கட்டாங்குளம், அய்யனார்புரம், NKP பள்ளி, கிழக்குத் தெரு, காந்தி நகர் காலனி, சாமிகுளம், முக்கிய சாலை, தண்ணீர் தொட்டி தெரு, காலனி பள்ளித் தெரு ஆகிய இடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் உள்ள சமையல் அறை கட்டிடத்தில் உள்ள பழுதினை சரி செய்ய உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

**1.மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**
**2. மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண்.3057/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **371, நாள்.05.10.2021**

**தீர்மானம்**

*******